**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S No. 10 of 2025

Deposition of P.W. 1

Name of the Witness: திருமதி.சத்யா

Date :08.07.2026

**குறுக்கு விசாரணை**

எனது தந்தை காவல் துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து பணியில் இருக்கும் போது தனது 54ம் வயதில் மஞ்சள் காமாலை நோயினால் பாதிக்கப்பட்டு 05.09.2017 அன்று இறந்து விட்டார். என் தாயார் 05.01.2023ம் தேதி இறந்து விட்டார். இந்த சொத்து பூர்வீக சொத்து என்பதற்கான ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறான ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு 02.11.2008ம் ஆண்டு திருமணம் நடந்தது. எனது சகோதரி பிருந்தாவிற்கு கடந்த 6, 7 வருடத்திற்கு முன்பு திருமணம் நடைபெற்றது. என தாத்தா செட்டியப்பன என்பவருக்கு பாத்தியப்பட்டதாக சொல்லகூடிய ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தற்போது சங்கரியில் உள்ள கே.ஆர்.பி கல்லூரியில் பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். எனது தங்கை பிருந்தா காவல் துறையில் Data Entry ஆப்ரேட்டராக பணிபுரிந்து வருகிறார். என் தங்கைக்கு எனது தகப்பனாரின் இறப்பினால் கருணை அடிப்படையில் வேலை போடப்பட்டது. எனது தாயார் இறக்கும் வரை 1ம் பிரதிவாதியான எனது சகோதரர் விஜயகுமார் பராமரிப்பில் இருந்து இறந்து விட்டார் என்றால் சரியல்ல. எனது தாயார் மற்றும் தந்தையின் இறுதிகாலம் வரை ஏற்பட்ட மருத்துவசெலவுகளை எனது சகோதரர் தான் செய்து வந்தார் என்றால் சரியல்ல. எனது திருமணத்தின் போது எனது பெற்றோர் வீட்டார் எனக்கு 30பவுன் நகை போட்டார்கள் என்றால் 15 பவுன் நகை

போட்டார்கள். எனது தங்கை பிருந்தாவிற்கு 30 பவுன் நகை போட்டார்கள் என்றால் 15 பவுன் நகை தான் போட்டார்கள். எனது தாயாரின் இறப்பின் போது அவரிடம் இருந்த 20 பவுன் நகைகளையும் நானும், எனது தங்கையும் தலா 10 பவுன் பிரித்து கொண்டோம் என்றால் நாங்கள் இருவரும் சேர்ந்து 6 பவுன் எடுத்துக் கொண்டோம்.

*(தொடர் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)*

Sd/Tmt.K.R.Jothi, B.A.,B.L.,
Additional District Judge,
Dharmapuri.